செய்தி வெளியீடு எண்: **646** நாள் : **09.12.2015**

## செய்தி வெளியீடு

## மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிட விரும்புவோர் நிவாரணப் பொருட்களை சென்னை ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டரங்கில் உள்ள மையத்தில் ஒப்படைக்கலாம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 7.12.2015 அன்று வெளியிட்ட அறிக்கையில் பல தொண்டு நிறுவனங்களும், தனியார் பலரும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கி உள்ளனர் எனவும் மேலும் தன்னார்வ அமைப்புகள் மற்றும் தனிநபர்கள் நிவாரணப் பொருட்களை வழங்க விரும்பினால் சென்னை ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டரங்கில் இதற்கென ஏற்படுத்தப்பட்டுள்ள மையத்தில் வழங்கலாம் எனவும் அறிவித்திருந்தார்கள். இதனைத் தொடர்ந்து வெளி மாநிலங்களிலிருந்தும், தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலிருந்தும், தொண்டு நிறுவனங்கள், தனி நபர்களிடமிருந்தும் நிவாரணப் பொருட்கள் இங்கு வந்த வண்ணம் உள்ளன. அவை தனித்தனியாக அலுவலர்களால் பிரிக்கப்பட்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு சென்னை மாநகராட்சி மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

எனவே மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிட விரும்புவோர் நிவாரணப் பொருட்களை சென்னை ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டரங்கில் இதற்கென ஏற்படுத்தப்பட்டுள்ள மையத்தில் உரிய அலுவலர்களிடம் ஒப்படைக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது.

***

**வெளியீடு:** இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9